RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1985

# கண்ணதாசன் சுட்டும் அறம்

**சௌ. சுருதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மங்கையர்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை-625402, தமிழ்நாடு, இந்தியா

# Moral Ideas of Kannadasan

**S. Suruthi** [a, *]

[a] Department of Tamil, Mangaiyarkarasi College of Arts and Science for Women, Paravai, Madurai-625402, Tamil Nadu, India

* Corresponding Author: suruthisoundhar@gmail.com

Received: 13-08-2022
Revised: 20-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Tamil literature has been presenting various moral ideas to the world from time to time. Tamil writers in their text have mentioned about the moral ideas that helps in improving a human life and it is necessary for social upliftment. These texts help us to know about the culture of Tamil people. Today's generation considers virtue as a great act and fails to understand that there are virtues in small actions too. This article breaks the myth that virtues are only mentioned in ancient poetry. This article is also a small attempt to bring out the moral ideas of Kannadasan. It is always a great privilege to do good deeds in human life and we people believe that the good deeds we do in this life will continue in the next life too. Since ancient times virtue is important for an individual to lead a better life. Everyone should do good deeds according to their conscience. This article explores the moral ideas expressed by the poet Kannadasan in his screen songs.

**Keywords:** Kannadasan, Moral Ideas, Tamil people, Human life

## முன்னுரை

மனித வாழ்வில் அறம் செய்வது பெரும் பாக்கியம் ஆகும்.நாம் இப்பிறவியில் செய்யும் நற்செயல்களுக்கான நற்பலன்களை அடுத்த பிறவியிலும் தொடரும் என்பது நமது இறை நம்பிக்கை. பண்டைய காலம் தொட்டு இன்று வரை அறம் மக்களின் வாழ்வில் இன்றியமையாததாகும். ஒவ்வொருவரும் அவரவர் மனசாட்சியின் படி பொது நலனுக்கு ஏற்ப நல்லவனவற்றை செய்ய வேண்டும் கல்வியறிவு சமூக கட்டுப்பாடு நல்லொழுக்கம் இவற்றின் அடிப்படையில் மனசாட்சி செயல்பட வேண்டும். கவிஞர் கண்ணதாசன் தனது திரையிசை பாடல்கள் கூறிய அறக்கருத்துக்களை ஆராய்வதாக இக்கட்டுரை விரிகிறது.

## அறம் பொருள் விளக்கம்

அறம் என்னும் சொல்லுக்கு தர்மம், புண்ணியம், அறச்சாலை, தர்ம தேவதை, தகுதியானது, சமயம் ஞானம், இதம், இன்பம் என பொருள் தருகிறது அகராதி. அறம் என்னும் சொல்லுக்கு அபிதான சிந்தாமணி பின்வருமாறு கூறுவதை அறியலாம். இல்லறம் துறவறம் என இரு வகைப்படும். நல்லறம் என்பது கொடுத்தலும் அழித்தலும் தேடலும் இன்மையும் ஒழுக்கம் புணர்வு உணர்ந்தோர் பேனல்

ஆகும். துறவறமாவது துறவும் அடக்கமும் தூய்மையும் தவமும் அறிவினை ஓங்குவது ஓம்பலும் மறவினை மறுத்தலும் பெறவும் ஆகும்.

“அரண்மனப் படுவது யாதெனக் கேட்பின்

மறவாது இதுக்கேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்”

அறம் எனப்படுவது உலகில் உள்ள உயிர் சொல்லுக்கு உணவு இருப்பிடம் உடை இவற்றை வழங்குவதே என்று மணிமேகலை தெரிவிக்கின்றது (Dhandabani, 2010). அறம் என்பது ஒருவர் கைக்கொள்ள வேண்டிய சிறப்பான நல்ல நெறியை குறிக்கும். நன்மையை மட்டும் கருத்தில் கொண்டு தீமையை அகற்றி வாழும் வழியைச் சொல்வது அறமாகும்.

## பொய்யாமை நன்று

மனிதர்களின் உன்னதமான உறவினை பேணுதலில் பெரும் பங்கு வகிப்பது பொய் சொல்லாமையே. ஒருவரின் நம்பிக்கையை பெறுதல் என்பது மிகவும் கடினம். அத்தகைய நம்பிக்கையை பொய் சொல்லாமையால் பெறுவது எளிது ஆகையால் அனைவரும் பொய் சொல்லாமல் உண்மையினை பேச வேண்டும் என்பதை நமது முன்னோர்கள் வலியுறுத்துகின்றனர்.

“தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்

தன்நெஞ்சே தன்னைச் சுடும்”

தன் நெஞ்சம் அறிந்த ஒன்றை மறைத்துப்பொய் கூறக்கூடாது. அவ்வாறு கூறினால் தன் நெஞ்சமே தன்னைச் சுட்டுத் துன்புறுத்தும் என்பதை வள்ளுவர் இக்குறப்பாவில் கூறியுள்ளார் (Subramaniyan, 2012).

“போயும் போயும் மனிதனுக்கிந்த

புத்தியை கொடுத்தானே

இறைவன் புத்தியை கொடுத்தானே

அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து

பூமியை கெடுத்தானே

மனிதன் பூமியை கெடுத்தானே”

அறமற்ற செயல்களாலே பூமியின் நலன் கெடுகிறது. வாழும் போதே சொர்க்க வாழ்க்கையினை நுகர வேண்டும் என்றால் பொய் பேசாது திருட்டுத்தனம் செய்யாதிருத்தல் வேண்டும் என்கிறார் கவிஞர் (Kannadasan, 2000).

## நிலையாமையும் இல்லாமையும்

மாந்தர்களில் பெரும்பாலானோர் நாம் வாழ்கின்ற வாழ்வு நிலையானது என்று எண்ணுகின்றனர் .ஆனால் ‘மாற்றம் என்ற சொல்லே மாறாதது’ என்பது போல நிலையாமையும் இல்லாமையும் உருவியற்ற வாழ்வு என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இக்கருத்தினை சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை வலியுறுத்த தவறியதில்லை.

“நிலையில்லாத வற்றை நிலையின் என்றுணரும்

புல்லறி வாண்மை கடை”

நிலைத்தது இல்லாத பொருள்களை நிலையானவை என்று எண்ணி மயங்குகின்ற இழிவான அறிவுடைமை மிகவும் தாழ்ந்ததாகும் என்று வள்ளுவர் நிலையாமை என்னும் அதிகாரமே வகுத்துள்ளார் (Subramaniyan, 2012).

யானையின் புறங்கெழுத்து விளங்க குடையின் நிழலில் சேனைப் படைகளுக்கு அதிபதியாகச் சென்ற அரசர்களும் ,தீவினை புரிவதனால் முன்பிருந்த நிலையிலிருந்து வேறுபட்டு, தாம் மனம் முடித்த பெண்ணை பகைவர் கொண்டு போக வீழ்ந்தவர் எனும் கருத்தை,

"யானை யெருத்தம் பொழியக் குடைநிழற்கீழ்ச்

சேனைத் தலைவனாய்ச் சென்றோரும் - ஏனை

வினை உலப்ப வேறாகி வீழ்வார்தாம் கொண்ட

மனையாளை மாற்றார் கொள"

என்னும் பாடல் சுட்டுகிறது (Kannadasan, 2000). செல்வமுடையவர்கள் எந்த சூழலிலும் வறியவர்களாக மாறக்கூடிய நிலையினை உடையவர்கள் என்பதை மேற்கூறிய பாடலின் வாயிலாக அறியலாம்.

கண்ணதாசனின் பாடல்கள் தலைமுறைகள் கடந்தும் அவரின் புகழை உலகிற்கு பறைசாற்றுவதாக இருக்கின்றன. அதில் நிலையாமையை எடுத்துரைக்கும் பாடல் பின்வருமாறு,

"போனால் போகட்டும் போடா

இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா

வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த

மண்ணில் நமக்கே இடமேது"

என்ற பாடல் வரிகள் நிலையாமையினை உணர்த்துகின்றன (Kannadasan, 2000). மேலும் இப்பாடலில் நமது உயிரே இறைவன் கொடுத்த இலவச பொருள் கொடுத்தவன் கேட்கும்போது நாம் தர இயலாது என்று மறுப்பது அறமன்று மறுக்கவும் இயலாது. அதனால் எதற்கும் கவலை கொள்ளக்கூடாது எப்பொருளின் மீதும் பற்றுக்கொள்ள கூடாது என்கிறார் கவிஞர்.

"வீடு வரை உறவு

வீதி காடு வரை பிள்ளை

கடைசி வரை யாரோ"

இவ் வரிகளில் அஃறினை மட்டும் இன்றி உயர்தினையாய் நம்மோடு பயணிக்கும் உறவுகளும் உடன் வரப்போவதில்லை என்பதை எலியோருக்கும் எளிமையாய் எழுதியுள்ள கவியரசு கண்ணதாசன் அவர்கள் (Kannadasan, 2000).

"பணம் இருக்கும் மனிதரிடம் மனம்

இருப்பதில்லை

மனமிருக்கும் மனிதரிடம் பணம் இருப்பதில்லை"

என்ற வரிகள் பணமும் குணமும் கூட நிலைத்திருப்பதில்லை உலகில் எதன் மீதும் கற்றுக் கொள்ள வேண்டாம் என்பதை அனுபவித்து அனுப்பியுள்ளார் மக்களின் மனங்களுக்கு கவிஞர் (Kannadasan, 2000).

## அரசியல் அறம்

அரசு, சமூகம் சார்ந்தது. அரசு நல்வழிப்பட்டால் தான் குடியும் குடிமக்களும் நல்வாழ்வு பெறுவர் என்பது கருத்து. மேலும் சமூகத்தில் நீதி என்பது பொதுமைப் பட்டதாக அமைய பெற வேண்டும். அரசு

- அரசு சார்ந்த அதிகாரம் - அதிகாரத்தால் கண்காணிக்கப்படும் நீதி பொதுவானதாக இருத்தல் அவசியம் என்பதை புறநானூறு எடுத்துரைக்கிறது.

"அரசின் கொற்றம்

அதனால், 'நமர்' எனக் ககோல் கூடாது,

'பிறர்' என குணம் கொல்லாது"

வேந்தர் உடைய வெற்றி என்பது மாண்புடைய அறநெறியை முதலாக உடையது (Subramaniyan, 2012). ஒருவர் தீமை புரிந்த வழி அவர் நம்மவர் என்று அவர் தீமையைப் பொறுத்துச் செங்கோல் வளையச் செய்தல் கூடாது. ஒருவர் அயலார் என்று அவருடைய நற்குணங்களை போற்றாமலிராதே எனும் செய்தி அரசனுக்கான அறத்தினை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறை என்று வைக்கப் படும்"

என்ற குரலின் மூலம் வள்ளுவர் கூறியதாவது அரசனைக் கடவுளாக நினைத்த காலத்தில் மன்னவன் நல்ல முறையில் ஆட்சி செய்தால் மட்டுமே கடவுளாக மக்கள் போற்றுவார்கள் என்கிறார் (Kannadasan, 2000). அக்கருத்தை ஒற்றியே கண்ணதாசன் அவர்கள்,

"ஊரை ஏமாற்றும் உல்லாச காரன்

வேஷத்தை கலைக்க போகிறான்!

தினம் பாடுபட்டவன் பட்டினி உள்ளவன்

பாவப்பட்டவன் பள்ளத்தில் உள்ளவன்

வாழ்வை முன்னேற்ற போகிறேன் - மக்கள்

வாழ்வை முன்னேற்றப் போகிறேன்"

அரசாளும் மன்னன் மக்களின் பட்டினியை போக்க வேண்டும். அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி பொருளாதாரம் உயர்வதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறார் (Kannadasan, 2000). மேலும்,

"வேற்று நாட்டோர்கள் என் வீட்டுச் சோற்றை

திங்காமை காக்கப் போறேன்"

நம் நாட்டுடன் நட்பு பாராட்டும் நாடுகளுடன் நட்பு பாராட்டியும், பாதகம் என்னும் நாட்டிடம் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் (Kannadasan, 2000).

## இறை நம்பிக்கை

தமிழர்கள் எப்பொழுது தனித்தனி குடும்பகளாக வாழத் தொடங்கினார்களோ அப்பொழுது அவர்களிடம் இறைவன் நம்பிக்கை ஏற்பட்டது என்றே கூறலாம். மனிதர்களின் மனதில் தோன்றிய அச்ச உணர்வே தெய்வ நம்பிக்கை எனலாம் . எனினும் தெய்வ நம்பிக்கை தோன்றிய காலத்திலேயே பல தெய்வ வழிபாடு இருந்துள்ளதை சான்றுகளின் வலி காணலாம்.

"மாயோன் மேய காடுறை உலகமும்

சீயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய மறையாற் சொல்லவும் படுமே"

என்கிறது (Ilampuranar, 2008). நம் வாழ்க்கை என்பது ஒரு பொம்மலாட்டம் போன்றது. கண்ணுக்குத் தெரியாத ஒரு மெல்லிய கயிற்றால் நாம் இயங்குகிறோம். அதை ஆட்டுவிப்பவன் மேலிருந்து இயக்குகிறான். மெல்லிய கைற்றால் ஆட்டுவிக்கும் அந்த சக்தியை அவரவர் வசதிக்கு ஏற்ப பெயரைக் கொண்டு அழைக்கின்றோம். என்பதை கண்ணதாசன் தன் கவிதையில் தெரிவித்துள்ளார்.

"நமக்கு மேலே ஒருவனடா - அவன்

நாளும் தெரிந்து தலைவனடா - தினம்

நாடகம் ஆடும் கலைஞனடா"

என்கிறார். இன்னொரு பாடலில்

"ஆட்டுவித்தால் யாரொருவர்

ஆடாதாரே கண்ணா"

என்ற கருத்தை கவிஞர் பதிவு செய்துள்ளார் (Kannadasan, 2000).

## முடிவுரை

மனிதனை வழி நடத்துவது அவனது எண்ணங்கள். எண்ணங்கள் செயலாக மாறுகின்றன. எண்ணங்களின் அடிப்படை அவன் அறிந்த இலக்கியங்கள் அனுபவ அறங்களைப் பொறுத்தே அமைகின்றன. அந்த வகையில் மக்களின் செவி வழி மனதை வருடிய கவியரசு கண்ணதாசன் பாடல்களில் உள்ள அறச்செய்திகளை விளக்கி உள்ளது இக்கட்டுரை.

## References

Dhandabani, (2010) Manimegalai, Uma Pathippagam, Chennai, India.

Kannadasan, (2000) Kannadasan Thiraipadalkal, Vaanathi pathippagam, Chennai, India.

Ilampuranar, (2008) Tholkapiyam Porul Athigaram, Ilampuranar Urai, Saratha Pathipagam, Chennai, India.

Subramaniyan, P.A. (2012) Pathenkelkannaku Noolgal, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License